இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 25-07-2023

# எரிவது யாரால்?

எரியும் மணிப்பூர் தீயை ஏன் அணைக்கவில்லை என்று பா.ஜ.க. மீது கேள்வி எழுப்பப்படுகிறது. நியாயமான கேள்விதான். மணிப்பூர் மாநிலத்தை ஆள்வதும் பா.ஜ.க. ஒன்றியத்தை ஆள்வதும் பா.ஜ.க. அவர்கள் தான் அந்தத் தீயை அணைக்க வேண்டும். மே 4 ஆம் தேதி தொடங்கிய பிரச்சினையை சூலை மாதக் கடைசி வரைக்கும் அவர்களால் ஏன் அடக்க முடியவில்லை? எதனால் என்றால்... அதை - அந்தப் பிரச்சினையை உருவாக்கியதே அவர்கள்தான்.

இங்கு வாழும் 53 விழுக்காடு மக்கள் மைத்தி இனத்தைச் சேர்ந்தவர்கள். குக்கி, நாகா உள்ளிட்ட பழங்குடி மக்கள் மலைப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். 'மைத்தி' மக்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். குக்கி பழங்குடியினர் சிறுபான்மை கிறித்துவ மதத்தை பின்பற்றுபவர்கள்.

**குக்கி பழங்குடியின மக்களுக்கு தரப்பட்டுள்ள உரிமையை மைத்தி இன மக்கள் கேட்கிறார்கள். இதனை பா.ஜ.க. பயன்படுத்திக் கொள்கிறது. மைத்தி இன மக்களை பழங்குடியினராக சேர்ப்பது குறித்து மாநில அரசு நான்கு வாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று மணிப்பூர் நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 19 அன்று தீர்ப்பளிக்கிறது. தனது முடிவை மாநில அரசு எடுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடுகிறது.**

**ஏற்கனவே அனைத்து வசதிகளையும் அடைந்து வரும் மைத்திகளுக்கு பழங்குடியின சலுகையும் கொடுத்தால் இதில் உள்ள இடங்களையும் அவர்களே அடைவார்கள் என்று குக்கி மக்கள் பயந்தார்கள். எனவே, தங்கள் எதிர்ப்பை பதிவு செய்யத் தொடங்கினார்கள். ஏப்ரல் 23 அன்று வேலைநிறுத்தம் நடந்தது. மே 3 அன்று மணிப்பூர் தலைநகர் இம்பாலில் பேரணி நடத்தினார்கள் குக்கி இன மக்கள். 'மைத்தி இனப்பெண்ணை குக்கி பழங்குடியினர் பாலியல் வன்கொடுமை செய்ததாக' வதந்தி கிளப்பினார்கள். அதன் பிறகு வன்முறை வெடிக்கத் தொடங்கியது.**

மொத்தமுள்ள 60 உறுப்பினர் கொண்ட மணிப்பூர் சட்டமன்றத்தில் 40 உறுப்பினர் கொண்ட தொகுதிகளில் மைத்தி இன மக்கள் அதிகம் வாழ்கிறார்கள். தனது அரசியல் லாபங்களுக்காக அவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க முயற்சிக்கிறது பா.ஜ.க. ஆய்வாளர் கார்த்திக் புகழேந்தி இதுகுறித்த பல்வேறு தகவல்களை விரிவாக எழுதி இருக்கிறார்....

"மணிப்பூரின் இரு இனக் குழுக்களுக்கு இடையே பரப்பிவிடப்பட்ட இந்த வெறுப்பரசியல், வன்முறை, கலவரங்களுக்குப் பின்னால், நீதிமன்ற உத்தரவு மட்டுமல்ல... மதம், அரசியல், பொருளாதார வளச் சுரண்டல் உள்ளிட்ட காரணங்களும் இருக்கின்றன. 2022-ல் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில், பா.ஜ.க. 32 இடங்களில் வென்றது. அவற்றில் இம்பால் (17), பிஷ்னுபூர் (4) சுரசந்த்பூர்(3), சந்தேல் (2) ஆகிய பா.ஜ.க. வென்ற தொகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் மைத்திகள்.

300 ஆண்டுகள் பழமையான மைத்திகளின் 'சனமகி' பண்பாடும், மத சம்பிரதாயங்களும் ஒன்றோடு ஒன்று பிணைந்து கிடக்கிறது. இதனால், பெரும்பான்மை மைத்திகள் மீது அக்கறை காட்டுவதாகச் சொல்லிக் கொண்டு, சிறுபான்மையினரான கிறிஸ்தவ குக்கி பழங்குடிகளை அவர்களுக்கு நேரெதிராக நிறுத்தும் அரசியல் அங்கு பா.ஜ.க. வுக்குப் பலனளித்திருக்கிறது. இதற்காக, மணிப்பூரில் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மைத்திகள் தரப்பிலான கோரிக்கை முதன்மைபடுத்தப்படுகிறது. இது பழங்குடியினரை சமவெளிகளில் இருந்து வெளியேற்றுவதற்கான மறைமுகக் குரல்தான்.

**ஒருபுறம், காட்டைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றி, அவர்களின் வீடு, கட்டடங்களை இடிக்கும் பணிகளையும் ஆளும் பா.ஜ.க. அரசு மேற்கொள்கிறது. மறுபுறம், சட்டமீறல்களுடன் மலைப் பகுதியில் பழங்குடியினர் அல்லாதவர்களின் ஆக்கிரமிப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதற்கிடையே, அண்டை நாடுகளிலிருந்து குக்கி இனப் பழங்குடிகள் மணிப்பூரில் ஊடுருவி இருக்கிறார்கள் என்றும், அவர்களை உள்ளூர் குக்கி மக்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் திட்டமிட்ட வெறுப்புப் பிரசாரம் அங்கு மேற்கொள்ளப்படுகிறது.**

மணிப்பூரிலும் அரம்பை தெங்கால், மைத்தி - லீபன் உள்ளிட்ட சில பாசிச பா.ஜ.க.வின் ஆசிபெற்ற அமைப்புகளே இந்த வன்முறையினை முன்னின்று நடத்தியிருக்கின்றன. நவீன ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை ஏந்தியபடி இருசக்கர வாகனங்களில் கும்பலாகச் சென்று, காவல் நிலையங்களைச் சூறையாடி, குக்கி பழங்குடி கிராமங்களில் புகுந்து, அவர்களின் வீடுகளை, பொருட்களை, பெண்களை, ஆண்களை நாசம் செய்து கொலைகளில் ஈடுபடுகின்றன. இந்த அமைப்புகளின் முக்கியக் கொள்கை, மணிப்பூரின் மன்னர் காலத்துப் பண்பாடான 'சனமகி' ராஜ்ஜியம் திரும்பவும் வரவேண்டும் என்பதுதான். மணிப்பூர் மாநில ஆர்.எஸ்.எஸ் தலைமையகத்தில் பறப்பது இவர்களின் சனமகி கொடியே" என்று எழுதி இருக்கிறார் கார்த்திக் புகழேந்தி. ஏன் பா.ஜ.க. மவுனம் காக்கிறது என்று தெரிகிறதா?

**யாரால்? என்றால் இவர்களால்தான். அதனால்தான் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மணிப்பூரில் நடப்பது சட்டம் ஒழுங்கு மீறல் அல்ல. பா.ஜ.க. ஆதரவு சக்திகளால் உருவாக்கப்பட்ட சமூகக் குழப்பம் ஆகும். அதனால்தான் வேண்டுமென்றே மவுனம் காக்கிறார்கள். இவர்களது மவுனத்துக்கான பலிகளே அப்பாவி மக்கள். பாசிச பசிக்கு இன்னும் எத்தனை உயிர்கள் வேண்டும்?**

## மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிப்பு!

மேட்டூர், ஜூலை 25-
மேட்டூர் அணைக்கான நீர்வரத்து 154 கன அடியாக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை மேட்டூர் அணை நீர்மட்டம் 69.96 அடியிலிருந்து 68.94 அடியாக குறைந்தது. அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 107 கன அடியிலிருந்து 154 கன அடியாக சற்று அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 10,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணையின் நீர் இருப்பு 31.79 டிஎம்சியாக உள்ளது.



வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூரில் கலைஞர் மாளிகையை கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் மாவட்டக் கழக தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநகர தி.மு.க செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்த தமிழ்நாடு தேர்வு!

## மணிப்பூர் நிலவரம் கருதி அம்மாநில வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

சென்னை, ஜூலை 25 -
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மணிப்பூர் மாநில விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டில் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பதாவது:-

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை வழங்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு அரசு எடுத்துவரும் விளையாட்டு மேம்பாட்டு முன்னெடுப்பு திட்டங்களால், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு விளையாட்டுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.

**மணிப்பூர் நிலவரத்தை கவலையுடன் பார்க்கிறோம்!**

விளையாட்டுப் போட்டிகளில் திறமைக்கு பெயர் பெற்ற மாநிலமான மணிப்பூரில் உள்ள தற்போதைய நிலையை தமிழ்நாடு மிகுந்த கவலையுடனும், வேதனையுடனும் பார்க்கிறது. மணிப்பூர் எப்போதும் தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான சாம்பியன்களை, குறிப்பாக பெண் சாம்பியன்களை உருவாக்கி வந்துள்ளது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை அடுத்த ஆண்டு (2024) நடத்துவதற்கான மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த போட்டியினை சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எல்லா ஊரும் எனது ஊர். எல்லா மக்களும் எனது உறவினர் என்று நினைத்து, அன்பே வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு மிகவும் இனிமையானதாகத் திகழும் என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று வரிகள்தான் தமிழர் பண்பாட்டின் அடையாளமும், அடித்தளமும் ஆகும்.

**சிறந்த வீரர்களுக்கு பயிற்சி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உதவ வேண்டும்!**

அந்த வகையில், தற்போது மணிப்பூர் மாநிலத்தில் ஆசிய விளையாட்டு, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் போன்ற தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு பயிற்சி அளிக்க சாதகமற்ற சூழ்நிலை நிலவுவதால், அம்மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து பயிற்சிகள் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இவ்விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் உயர்தர பயிற்சிகள் அளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

**தமிழ்நாட்டுக்கு வருகை தரும் வீரர்கள் தொடர்பு கொள்ள வசதி!**

மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு வசதிகளை பயன்படுத்திக் கொள்ள அவர்களின் விவரங்களை அதாவது தங்கள் பெயர், முகவரி, அடையாளச் சான்று, தொடர்பு விவரங்கள், விளையாட்டு சாதனைகள் மற்றும் பயிற்சித் தேவைகள் போன்ற விவரங்களுடன் மின்னஞ்சல் (sportstn2023@gmail.com) முகவரியில் மற்றும் தொலைபேசி எண். +918925903047 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

## வேலூர் மாவட்டம் - காட்பாடியில் கலைஞர் நூற்றாண்டு மாளிகை!

### கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார்!

வேலூர், ஜூலை 25 -
வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூரில் கலைஞர் நூற்றாண்டு மாளிகையை கழக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார்.

காட்பாடி தெற்கு பகுதி கழிஞ்சூர் தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு மாளிகை திறப்பு விழா கழிஞ்சூர் மந்தைவெளி அருகே நடந்தது.

நிகழ்ச்சிக்கு காட்பாடி தெற்கு பகுதி திமு.க. செயலாளரும் மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில் குமார் தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் நரசிம்மன் கண்ணன் மாநகராட்சி கவுன்சிலர்கள் சரண்யா சரவணன், ரஜினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் பிச்சாண்டி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு கலைஞர் நூற்றாண்டு மாளிகையை திறந்து வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

சட்டமன்றத் தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 11 முறை என்னை வெற்றி பெற செய்துள்ளீர்கள்.

எப்படி நீங்கள் ஒரே தொகுதியில் இத்தனை முறை ஜெயித்தீர்கள் என்று என்னை கேட்பார்கள். அவர்களுக்கு நான் சொல்வது என்றைக்கும் என்னுடைய தொகுதி காட்பாடி தொகுதி தான். என்னை தி.மு.க. காரனாக்கியது கழிஞ்சூரை சேர்ந்த ஆசிரியர் தான். தி.மு.க ஆட்சியில் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காட்பாடி தொகுதியில் நான் வெற்றி பெற்றால் மருத்துவமனை கல்லூரி கொண்டு வருவேன் என்று சொன்னேன் அதன்படி கொண்டு வந்துள்ளேன் காட்பாடி ஏரி கழிஞ்சூர் ஏரிகளை இணைத்து தரைகளை பலப்படுத்தி அதன் நடுவே தீவு அமைத்து அதற்கு படகு வசதி செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் எந்த விதமான சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லை. மணிப்பூர் போல கலவரம் இங்கு இல்லை சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது. காட்பாடி நகரத்தில் தி.மு.க அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டும் அவ்வாறு அமைத்தால் அதில் தலைவர் கலைஞர் சிலையை நான் அமைத்து தருகிறேன் என்றும் உங்களுக்கு சேவகனாக நான் இருப்பேன். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ .பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க. செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் பரமசிவம் வன்னியராஜா, முருகப் பெருமாள், மாநகராட்சி கவுன்சிலர் அன்பு, மண்டல குழுதலைவர் புஷ்பலதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் வட்ட செயலாளர் இளங்கோ நன்றி கூறினார்.

### திருச்சியில் நாளை பாக முகவர்கள் கூட்டம்!


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

### விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, ஜூலை 25 -
தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டெல்டா மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழகங்களில் உள்ள தொகுதியில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் திருச்சியில் நாளை (26 ஆம் தேதி) நடைபெறுகிறது.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட செஞ்சி , மயிலம், திண்டிவனம், தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு முதல்வரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகங்களில் உள்ள தொகுதியில் அடங்கி உள்ள வாக்குச்சாவடி தொகுதியில் அடங்கியுள்ளவாக்குச்சாவடி நிலைகுழு முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் நாளை (26.7.2023- புதன்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருச்சி ராம்ஜி நகர் கருமண்டபம் என்ற இடத்தில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் B.L.A. 2 முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்து உரிய நேரத்தில் அனைவரையும் அழைத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருக்கோவிலூர் கபிலர் பண்பாட்டுக் கழகம் நிறைவு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், உடுமலைப்பேட்டை வேலுசாமி, ஒன்றியச் செயலாளர்கள் மு.தங்கம், ஆ.சா.பிரபு, நகரச் செயலாளர்கள் கோபிகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, பேரூராட்சி தலைவர் எஸ்.எஸ்.அன்பு மற்றும் பண்பாட்டு கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.